# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான
# இலகுவழி மாதிரிப் பரீட்சை - 46

**ஆசிரியர் : P.அம்பிகைபாகன்**

**வினாத்தாள் - 2**

1 மணி 15 நிமிடங்கள்

**(அரச பரீட்சையைத் தழுவிய மாதிரிப் பரீட்சை)**

**பின்வரும் பந்தியை வாசிக்க.**

பேசும் போதும் எழுதும் போதும் சொற்களின் பொருளை நன்கு அறிந்து பயன்படுத்துதல் வேண்டும். ஒவ்வொருவரதும் அறிவு அனுபவம் என்பவற்றைப் பொறுத்து அவர்கள் அறிந்திருக்கும் சொற்களின் எண்ணிக்கையும் வேறுபடும்.

சொற்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கு வாசிப்புப் பயிற்சி உதவிபுரியும். மாணவர்கள் தமது வகுப்பு நிலைக்கேற்ற இலகுவான நூல்களை வாசிப்பதை வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். கண்களைப் போல நூல்களையும் பேணுங்கள். நூல்களை மற்றவர்களுக்கும் வழங்கி வாசிப்பை ஊக்குவியுங்கள்.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

01. அறிந்திருக்கும் சொற்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வழி யாது?
( ______________________ )

02. 'அறிவு' என்ற சொல்லின் எதிர்க்கருத்துச்சொல் யாது? ( ______________________ )

03. 'இலகு' என்ற சொல்லின் ஒத்த கருத்துச்சொல் யாது? ( ______________________ )

04. நூலில் என்ற சொல்லின் பன்மைச்சொல்லை எழுதுக. ( ______________________ )

05. இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ( ______________________ )

06. 'நூல்களை இரவல் வாங்கிப்படி' என்பதில் இரவல் என்பதன் கருத்து யாது?
( ______________________ )

**07. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

01. ஆற்றிலே போட்டாலும் ______________________ போடு.
( அழந்து / அளந்து / அலந்து )

02. ஏழை பேச்சு ______________________ ஏறாது.
( அம்பலம் / அம்பளம் / அம்பழம் )

03. அம்மா ______________________ என்று பேசிக்கொண்டிருந்தாள்.
( விறுவிறு / வழவழ / கடகட )

04. பயணிகள் ______________________ புகைவண்டியினுள் ஏறினர்.
( முட்டிமோதிக் கொண்டு / அடிச்சுப்பிடிச்சு / ஆறஅமர )

**08. ஒருமை வாக்கியத்தை பன்மையாகவும், பன்மை வாக்கியத்தை ஒருமையாகவும் மாற்றி எழுதுக.**

01. நாய்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தன.

______________________________________________

02. பால் நிரம்பி வழிந்தது.

______________________________________________

**09. வாக்கியங்களுக்கு பொருத்தமான மரபுத் தொடரை தெரிவு செய்து எழுதுக.**

01. முதலாளி தொழிலாளர்களை வருத்தி வேலை வாங்கினார்.
( பம்பரமாட்டி / கசக்கிப் பிழிந்து / கட்டியடித்து )

02. கமலன் பரீட்சைக்கு அதிக அக்கறையுடன் படித்தான்.
( கண்ணுங்கருத்துமாய் / அல்லும் பகலுமாய் / ஓய்வு ஒழிச்சலின்றி )

10. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
   1. நல்லநாளில் / மாடுகளை / கமக்காரர்கள் / ஏர்மங்கலம் / கலப்பையில் / தொழில் / பூட்டி உழவுத் / என்பார்கள் / தொடங்குவதை

   ______________________________________________

   2. காலிநகரம்/ தென்மாகாணத்தின் / விளங்குகின்றது / இலங்கையில் / ஒரு முக்கிய நகரமாக

   ______________________________________________

11. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.
   1. இளங்கன்று பயம் அறியாது. ______________________
   2. பழகப்பழகப் பாலும் புளிக்கும். ______________________

12. ஒவ்வொரு தமிழ் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.
   1. காலை உணவு ______________________
   2. மதிய உணவு ______________________
   3. இரவு உணவு ______________________

13. கருத்தைத் தமிழில் எழுதுக.
   1. A SMALL WATER BOTTLE. ______________________
   2. A BIG TOY BOX ______________________
   3. HOW MANY PENS? ______________________

14. பின்வரும் ஒவ்வொரு சிங்கள் வாக்கியத்தினதும் கருத்தை தமிழில் எழுதுக.
   1. நங்கி, சுது பாட்டாய் ______________________
   2. அய்யா, களு பாட்டாய் ______________________
   3. மம, லஸ்ஸனாய் ______________________

15. பின்வரும் உபகரணங்களின் பயன்களை எழுதுக.
   1. கத்தரிக்கோல் ______________________
   2. கவராயம் ______________________
   3. சுவர்ச்சுத்தியல் ______________________

16. பின்வரும் பிராணிகள் இடம்பெயர உதவுபவற்றை எழுதுக.
   1. பூனை ______________________
   2. நத்தை ______________________
   3. வெளவால் ______________________

**17 தொடக்கம் 27 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிக.**

17. எதிரியிடமிருந்து தப்புவதற்காக தமது உடலை ஓட்டுக்குள் இழுத்துக் கொள்ளும் பிராணி எது?
   1. அட்டை   2. நத்தை   3. மண்புழு

18. எதிரியிடமிருந்து தப்புவதற்காக தமது உடலை சுருள் போன்று சுருட்டிக் கொள்ளும் பிராணி எது?
   1. அட்டை   2. நத்தை   3. மண்புழு

19. தமது முட்டைகளை பாதுகாப்பதற்காக மண்ணினுள் புதைத்து விடும் பிராணிச் சோடி எது?
   1. மீன்கொத்தி, முதலை   2. ஆமை, முதலை   3. முதலை, தேரை

20. விவசாயிகளுக்கு உதவும் பிராணிச் சோடி எது?
   1. மண்புழு, கோழி   2. காகம், புறா   3. மண்புழு, சிலந்தி

21. மனிதரின் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் பிராணிச் சோடி எது?
 1. நுளம்பு, கரப்பான் 2. பேன், நுளம்பு 3. ஈ, நுளம்பு

22. இலங்கைக்கு எத்திசையில் இந்தியா அமைந்துள்ளது?
 1. வடக்கு 2. மேற்கு 3. தெற்கு

23. உலகின் மிகப் பெரிய சமுத்திரம் எது?
 1. இந்து சமுத்திரம் 2. பசுபிக் சமுத்திரம் 3. அத்திலாந்திக் சமுத்திரம்

24. தேசப்படங்களில் மலைகளைக் குறித்துக் காட்டப் பயன்படும் நிறம் யாது?
 1. நீலம் 2. பச்சை 3. கபிலம்

25. மின்சாரம் உற்பத்தி செய்யும் நீர்வீழ்ச்சிச் சோடி எது?
 1. தியலும, பம்பரகந்த 2. லக்சபான, அபர்டீன் 3. றம்பொடை, லக்சபான

26. கோள்களில் மிகப் பெரிய கோள் எது?
 1. புதன் 2. வியாழன் 3. சுக்கிரன்

27. நம்மைச் சூழவுள்ள வளியில் அதிக அளவில் காணப்படும் வாயு எது?
 1. நைதரசன் 2. ஐதரசன் 3. ஒட்சிசன்

28. மூன்று பறவைகளின் படங்களும், அவற்றின் கால்களின் படங்களும் ஒழுங்கு மாறித் தரப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு புள்ளிக் கோட்டினால் தொடர்புபடுத்துக.



29. 

இலங்கைக்கு உன்னத சேவை ஆற்றியவரும் இப்படத்தில் காணப்படுபவருமான பெரியாரின் பெயரை எழுதுக.

______________________________

30. இலங்கையின் மூன்று மாகாணங்களின் பெயர்களை எழுதுக.
 1. ________________ 2. ________________ 3. ________________

31. கீழேயுள்ள வினாக்களில் காட்டப்பட்டுள்ள இலக்க அட்டைகளைப் பயன்படுத்தி ஆக்கத்தக்க மிகப் பெரிய எண்களை எழுதுக.

 1. [3] [3] [1] [8] ____________
 2. [7] [4] [4] [2] ____________
 3. [6] [9] [5] [3] ____________

32. கீழேயுள்ள உருக்களின் முகங்களின் எண்ணிக்கையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

1.  ______________

2.  ______________

3.  ______________

33. கீழேயுள்ள நிரைக்கூட்டல்களை கூட்டுக.

1. 9643 + 342 + 72 = ______________
2. 6962 + 1346 + 412 = ______________
3. 27 + 1346 + 412 = ______________

34. கீழேயுள்ள உருக்களின் சுற்றளவுகளைக் காண்க.

1. 

______________

2. 

______________

3. 

______________

**விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

35. ரூபா 62.00 விலையுள்ள ஒரு புத்தகத்தையும் ரூபா 16.50 விலையுள்ள ஒரு பேனாவையும் வாங்குவதற்கு ரூபா 100 தாள் ஒன்றை கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதி எவ்வளவு?

( ______________________ )

36. 810 தோடம்பழங்கள் 18 பெட்டிகளில் சமமாக அடுக்கப்பட்டன. இரு பெட்டிகளில் உள்ள தோடம்பழங்களின் எண்ணிக்கை யாது?

( ______________________ )

37. ஒரு போத்தலில் உள்ள பாலின் அளவு 375ml கனவளவு ஆகும். இத்தகைய 7 போத்தல்களில் உள்ள பாலின் கனவளவை லீற்றர் மில்லி லீற்றரில் தருக.

( ______________________ )

கடந்த வருடம் மாகாண மட்டத்தில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நீர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளீர் என்ற தகவலை பாடசாலை அறிவிப்புப் பலகையில் பார்த்த போது உமது மனதில் தோன்றியவற்றை மூன்று வாக்கியங்களாக எழுதுக.

38. ________________________________________

39. ________________________________________

40. ________________________________________